1972 நவம்பர் 14]

தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலைகள்

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இருநூறு தொழிலாளர்களுக்கு மேற்பட்டு பணியாற்றும் தொழிற்சாலைகளில் தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைத்திட வேண்டும் என்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) இல்லை. ஆனால் 250 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றும் தொழிற்சாலைகளில், தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைத்திட அரசு ஒரு திட்டத்தை வகுத்து, அத்திட்டத்தின்படி இப்போது 186 கூட்டுறவுப் பண்டகசாலைகள் செயல்பட்டு வருகின்றன.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, 200 ஆசிரியர்கள் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களில் இத்தகைய பண்டகசாலைகளை ஏற்பாடு செய்வதற்கு கூட்டுறவுத் துறையில் ஏதாவது திட்டங்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இதற்கு தனியாகத் திட்டம் தேவையில்லை. பத்து பேர்கள் சேர்ந்து ஒரு பண்டகசாலையை அமைக்க வேண்டுமென்று விரும்பினால், அவர்கள் அமைத்துக்கொள்ளலாம்.

Ramanathapuram–Coimbatore State Transport Express Bus Service

* 307 *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Ramanathapuram–Coimbatore State Transport Express Bus Service (Route No. 524) has been cancelled; and

(*b*) if so, the reasons therefor?

[1972 நவம்பர் 14

இராமநாதபுரம்–கோயம்புத்தூர் அரசுப் போக்குவரத்து விரைவுப் பேருந்து

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம்–கோயம்புத்தூர் அரசுப் போக்குவரத்து விரைவுப் பேருந்து (வழித்தடம் எண் 524) ரத்து செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம்–கோயம்புத்தூர் அரசுப் போக்குவரத்து விரைவுப் பேருந்துப் பணியை (வழித்தடம் எண் 524) இயக்குவது ஆதாயம் தருவதாக இல்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இம்மாதிரியான பேருந்து ஆதாயம் கருதாதபடி பொதுமக்கள் சௌகரியத்தை மாத்திரம் கருதி நடத்தப் படுவதாகத்தான் முன்னால் அரசு தெரிவித்தது. இந்தப் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டதால், பெரும் அசௌகரியம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று இராமநாதபுரம் பக்கத்திலிருந்து அமைச்சர் அவர்களுக்கு முறையீடு வந்திருக்கிறதா ? இந்த முடிவை அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ராமநாதபுரத்திலிருந்து மதுரைக்கு வருவார்களேயானால், கிட்டத்தட்ட 22 பேருந்து சர்வீஸ்கள் கோயம்புத்தூருக்கு இருக்கின்றன. ராமநாதபுரத்திலிருந்து நேரடியாக கோயம்புத்தூருக்குச் செல்வதில் சரியான வருவாய் கிடைப்பதில்லை. இன்னும் சொல்லப்போனால், ரூ. 11,900 நமக்கு சாதாரணமாக வருவாய் வர வேண்டும். ஆனால் வந்த வருவாய் ரூ. 3,577 தான். இதுவும் கிட்டத்தட்ட 30 சதவிகித அளவுக்கு இருப்பதனால், பயணிகளிடமிருந்து ஆதரவு இல்லையென்ற அடிப் படைக் காரணத்தை வைத்துத்தான் இந்த சர்வீஸ் ரத்து செய்யப்பட்டது.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether it was a general policy decision that resulted in the closure of this route or whether there were other considerations that played a part in the closure of this route only or whether there are other routes also closed for economic reasons?

1972 நவம்பர் 14]

THE HON. THIRU S. RAMACHANDRAN: Every month there is a review of all the Express Routes and wherever they find an uneconomic route, they use to wait for some time. Even after two or three months, if it does not pick up, then the normal way is to dispense with that route.

THIRU A. R. DAMODARAN: May I know the number of routes that have been closed since 1st April?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, I lack the details.

THIRU M. RAJAH IYER: Sir, the Hon. Minister was pleased to state that there were 22 buses available from Madurai to Coimbatore and that the passengers from Ramanathapuram could very well go to Madurai and catch one of the twenty-two buses. When there are as many as 22 buses running from Madurai, why not at least one bus run from Ramanathapuram right up to Coimbatore and thus make one less from Madurai despite the loss to which the Government are put, so that the people are not inconvenienced?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, it does not mean that all the twenty-two buses are terminated at Madurai. Most of the buses pass through Madurai to various places like Nagercoil and Tirunelveli and facilities are available at Madurai for the passengers to go up to Coimbatore.

Madhavaram Milk Project

* 308 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the total collections made by the Madhavaram Milk Project for supplies made during 1969–70 and 1970–71 from (1) Firms (2) Educational Institutions and (3) Hospitals in Madras City?

மாதவரம் பால் பண்ணை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1969–70, 1970–71-ஆம் ஆண்டுகளில் பால் வழங்கியதற்காக, சென்னை மாநகரிலுள்ள (1) வணிக நிறுவனங்கள் (2) கல்வி நிறுவனங்கள், (3) மருத்துவமனைகள் ஆகியவற்றிடமிருந்து மாதவரம் பால் பண்ணை நிறுவனத்தால் வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு?